செ.வெ.எண் : 25 / ஆகஸ்ட் நாள் : 28.08.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## வங்கி போட்டித் தேர்வுக்கு இலவச ஆன்லைன் பயற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

மத்திய / மாநில அரசுப் பணிக்காலியிடங்களுக்குரிய போட்டித் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெற்று வந்த நிலையில் தற்போது கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக அப்பயிற்சி வகுப்புகள் ZOOM APP உள்ளிட்ட பல்வேறு அலைபேசி செயலிகள் மூலம் ஆன்லைன் வாயிலாக தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது அறிப்பு செய்யப்பட்டுள்ள 1417 வங்கி புரோபஷனரி ஆபீசர் (IBPS-Probationary Officer) காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்துள்ள மனுதாரர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் 31.08.2020 முதல் ஆன்லைன் வாயிலாக நடத்தப்பட உள்ளது. இந்த ஆன்லைன் பயிற்சி வகுப்பில் பங்கேற்க ஆர்வமுள்ள, போட்டித்தேர்வுக்கு தயாராகும் வேநைாடுநர்கள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை 9487375737 என்ற எண்ணில் வாட்ஸ்அப், குறுஞ்செய்தி வாயிலாகவும், 04567-230160 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு தங்களது பெயரை முன்பதிவு செய்து கொண்டு இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்று பயனடையுமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**